முதன்மை மாவட்ட நீதிமன்றம், இராமநாதபுரம்.

முன்னிலை– திரு.ஏ.கே.மெஹ்பூப் அலி கான், **B.L.M.,L.L.M.,PG.D.PM/IR, Dip.in.J.J & J.Psy., PG.D.D.F.,**
முதன்மை மாவட்ட நீதிபதி, இராமநாதபுரம்.

**2026 ம் ஆண்டு மார்ச் மாதம் 11 ம் நாள் புதன்கிழமை**

திருவள்ளுவர் ஆண்டு 2056 ஸ்ரீவிசுவாவசு வருடம் மாசி திங்கள் 27 ம் நாள் புதன்கிழமை

**G.W.O.P.No.95/2025**
**CNR.No. TNRM01-002382-2025**

1. மைனர்.லசிஹாதேவி, வயது 12, பிறந்த தேதி 06.09.2012, த/பெ.லேட்.எஸ்.பாலாஜி, கதவு எண்.131, இளங்கோவடிகள் தெரு, இராமநாதபுரம் டவுன், இராமநாதபுரம் மாவட்டம்.

2. மைனர்.சாய்கவின், வயது 10, பிறந்த தேதி 23.01.2015, த/பெ.லேட்.எஸ்.பாலாஜி, கதவு எண்.131, இளங்கோவடிகள் தெரு, இராமநாதபுரம் டவுன், இராமநாதபுரம் மாவட்டம்.

B. லிங்கலெட்சுமி ... மனுதாரர்

– எதிர்–

S. ராஜேஸ்கண்ணா ... எதிர்மனுதாரர்

இம்மனுவானது இறுதியாக என் முன்னர் 07.03.2026–ம் தேதியன்று விசாரணைக்கு வந்தபோது மனுதாரர் தரப்பில் வழக்கறிஞர் திரு.கே.நாகராஜன் அவர்கள் முன்னிலையாகியும், எதிர்மனுதாரர் தரப்பில் வழக்கறிஞர் திரு.எஸ்.கிருஷ்ணமூர்த்தி அவர்கள் முன்னிலையாகியும், இருதரப்பு வாதுரை கேட்கப்பட்டும் ஆவணங்கள் பரிசீலனை செய்யப்பட்டும் இன்று இந்நீதிமன்றம் பிறப்பித்திடும்..

MEHBUB ALI KHAN A K
Digitally signed by MEHBUB ALI KHAN A K
Date: 2026.03.11 17:56:22 +0530

**உத்தரவு**

இம்மனுவானது இளவர்.லசிஹாதேவி, இளவர்.சாய்கவின் ஆகியோர்களுக்கு வாரிசு அடிப்படையில் பாத்தியமான 2/3 பங்கு சொத்தினை அவரது தாயாரும் பாதுகாவலருமான மனுதாரர் விற்பனை செய்ய அனுமதியளித்து உத்தரவிடக்கோரி இளவர் மற்றும் காப்பாளர் சட்டம் பிரிவு 7 (1)(b)–ன் கீழ் தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

2. **மனுதாரர் தாக்கல் செய்துள்ள மனுவின் சுருக்கம்**:–

**2.1** மனுச்சொத்தானது மேற்படி மைனர்களுக்கு தகப்பனாரும், மனுதாரருக்கு கணவருமான லேட்.எஸ்.பாலாஜி என்பவர் வழியில் வாரிசு அடிப்படையில் 24.10.2018 ம் தேதியிட்ட ஆவண எண்.1564/2018 ல் கண்ட பாகப்பத்திரத்தின் மூலம் பாத்தியப்பட்ட சொத்தினை மனுதாரரும் அவரது மக்களான மைனர்கள் இருவரும் முழுப்பாத்தியம் அடைந்து அனுபவம் செய்து வருகிறார்கள். மனுதாரர் அவரது மைனர் மக்களின் காப்பாளராக இருந்து மேற்படி மைனர் மக்களை பராமரித்து படிக்க வைத்து வருகிறார். மேற்படி அவர்களை பராமரிப்பதற்கும், படிக்க வைப்பதற்கும் அவரிடம் போதிய பணம் இல்லை என்றும் மனுதாரருக்கென்று தனிப்பட்ட நிரந்தர வருமானம் எதுவும் இல்லை என்றும் கூறியுள்ளார்.

**2.2.** மனுதாரர் மற்றும் எதிர்மனுதாரரின் பெற்றோர்கள் இறந்துவிட்டதால் எதிர்மனுதாரர் மேற்படி மைனர்களின் சிறிய தகப்பனார் என்ற முறையில் மைனர்களின் நலனில் அக்கறை கொண்டு செயல்பட்டு வருகின்ற போதிலும், மனுதாரரே மேற்படி மைனர்களுக்கும் அவர்களுக்கு பாத்தியமான சொத்திற்கும் பாதுகாவலராக இருந்து பராமரித்து வருகிறார். மேலும், மனுதாரரின் கணவர்

MEHBUB ALI KHAN A K
Digitally signed by MEHBUB ALI KHAN A K
Date: 2026.03.11 17:56:27 +0530

இல்லாத நிலையில் மனுதாரரால் எந்தவித வேலைக்கும் செல்லமுடியாமல் குடும்ப வருமானமும் இல்லாமல் மைனர் மக்களை பராமரிப்பதற்கும், அவர்களுடைய கல்வி, மருத்துவச்செலவு மற்றும் அன்றாட தேவைகளுக்கும் பணம் இல்லாமல் மிகவும் சிரமப்பட்டு வருகிறார். எனவே தற்போது மைனர் குழந்தைகளை பராமரிக்கக்கூடிய அளவிற்கு போதுமான பணவசதி இல்லாமல் மனுதாரர் மிகவும் கஷ்டப்பட்டு வருகிறார். மனுதாரர் அவரது உறவினர்களிடம் பணஉதவி கோரமுடியாத சூழலில் உள்ளதாலும், மனுதாரர் தனது இளவர் மக்களுடைய கல்வி, மருத்துவம் மற்றும் பிற தேவைகளுக்காக மனுதாரருக்குப் பாத்தியமான பிரிவினையாகாத 1/3 பங்கு சொத்தினை விற்பனை செய்யவும், மேற்படி பணத்தை வைத்து மைனர்களை தொடர்ந்து பராமரிக்கவும் மனுதாரருக்கு பாத்தியப்பட்ட 1/3 பங்கு சொத்தை விற்பனை செய்ய முடிவு செய்துள்ளார்.

**2.3.** மேற்படி சொத்தானது மொத்தம் கிழமேல் ஜாதியடி 11, தென்வடல் ஜாதியடி 60 அளவுள்ள சிறிய சொத்து என்றும் மேற்படி சொத்திற்கு வடக்கே கிழமேல் ரோடு உள்ளதாகவும், 11 அடி அகலமுள்ள சொத்தை பிரிவினை செய்யமுடியாமல் மேற்படி சொத்தானது பிரிவினை செய்யமுடியாமல் இருந்து வருகிறது. மனுதாரருக்கு சேர வேண்டிய 1/3 பங்கு சொத்துடன் மேற்படி மைனர்களுக்கு சேர வேண்டிய 2/3 பங்கு சொத்தையும் சேர்த்து விற்பனை செய்தால் மட்டுமே மேற்படி சொத்தை விற்பனை செய்ய முடியும் என்றும், இம்மனுவில் கண்ட சொத்தை விற்பனை செய்வதை தவிர மனுதாரருக்கு வேறு வழியில்லை என்றும், இம்மனுவில் கண்ட சொத்தை விற்பனை செய்து அதிலிருந்து கிடைக்கும் பணத்தை மனுதாரர் இளவர்களின் நலனுக்கு மட்டுமே பயன்படுத்துவதாகவும், நீதிமன்ற உத்தரவின் பேரில் தேசியமயமாக்கப்பட்ட

MEHBUB ALI KHAN A K
Digitally signed by MEHBUB ALI KHAN A K
Date: 2026.03.11 17:56:33 +0530

வங்கியில் மேற்படி மைனர்களின் பெயரில் வைப்பீடு செய்ய தயாராக உள்ளதாகவும் கூறியுள்ளார். எனவே இம்மனுவில் கண்ட சொத்தை இளவர்களுடைய நலனுக்காக விற்பனை செய்ய உத்தரவு கிடைக்காமல் போனால் மனுதாரருக்கும், இளவர்களுக்கும் ஈடுசெய்ய முடியாத கஷ்ட, நஷ்டம் ஏற்படக்கூடியதாக இருக்கிறது. இளவர் லசிஹாதேவி, இளவர் சாய்கவின் ஆகியோருக்கு மனுதாரரே தாயார் என்ற முறையில் அவரது சொத்துக்கு காப்பாளராக நியமனம் செய்ய கோரக்கூடிய தகுதியும், உரிமையும் மனுதாரருக்கு மட்டுமே இருந்து வருகிறது. எனவே மனுதாரரே இளவர் லசிஹாதேவி மற்றும் இளவர் சாய்கவின் ஆகியோர்களுக்கு சட்டப்படியான காப்பாளர் என்ற முறையில், இளவர்களுக்கு வாரிசு அடிப்படையில் பாத்தியமான 2/3 பங்கு சொத்தினை அவரது தாயாரும் பாதுகாவலருமான மனுதாரர் விற்பனை செய்ய அனுமதியளித்து உத்தரவிடக்கோரியும் மனுதாரரால் இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

3. <u>எதிர்மனுதாரர் தாக்கல் செய்துள்ள எதிருரையின் சுருக்கம்:–</u>

மனுதாரரும் அவரது இளவர் மக்களுக்கும் எதிர்மனுதாரரின் பராமரிப்பில் இருந்து வருகிறார்கள். எதிர்மனுதாரரின் அண்ணன் மக்களான இளவர் லசிஹாதேவி மற்றும் இளவர் சாய்கவின் கல்விச்செலவுக்கும், மருத்துவச் செலவுக்கும் பணம் தேவைப்படுவதால் அசல் மனுவில் கண்ட சொத்தை விற்பனை செய்வதற்கு நீதிமன்றத்தில் உத்தரவு பெற்று வந்தால் மட்டுமே கிரையம் வாங்கமுடியும் என்று கூறுவதால் அச்சொத்தை நீதிமன்ற அனுமதியோடு விற்பனை செய்ய மனுதாரர் இம்மனுவை தாக்கல் செய்துள்ளார். மனுவில் கண்ட மனுதாரருக்கு சேரவேண்டிய 1/3 பங்கு சொத்துடன் மேற்படி மைனர்களுக்கு சேர வேண்டிய 2/3 பங்கு சொத்தை விற்பனை செய்தால்

MEHBUB ALI KHAN A K
Digitally signed by MEHBUB ALI KHAN A K
Date: 2026.03.11 17:56:37 +0530

மட்டுமே மேற்படி சொத்தை விற்பனை செய்யமுடியும் என்றும் மேற்படி சொத்தை விற்பனை செய்து அதிலிருந்து கிடைக்கும் தொகையை எதிர்மனுதாரரின் அண்ணன் மக்களின் கல்வி, நலன் மற்றும் மருத்துவச் செலவிற்காக மட்டுமே செலவு செய்வார். மேலும் எதிர்மனுதாரரும், மனுதாரரும் இளவர் மக்களின் நலனுக்கு விரோதமாக செயல்படமாட்டார்கள் என உறுதியளித்துள்ளார்கள். எனவே எதிர்மனுதாரரின் அண்ணன் மக்களான லசிஹாதேவி, சாய்கவின் மற்றும் அவர்களது தாயாரான மனுதாரரே இளவர்களின் நலனில் அக்கறை கொண்டவர் என்பதால் மேற்படி இளவர்களின் சொத்தை விற்பனை செய்வதற்கு அனுமதியளித்து உத்தரவிடுவதில் எதிர்மனுதாரருக்கு எவ்வித ஆட்சேபனையும் இல்லையென தெரிவித்துள்ளார்.

4. மனுதாரர் தரப்பில் லிங்கலெட்சுமி ம.சா.1 ஆக விசாரிக்கப்பட்டுள்ளார். அவர் மூலம் ம.சா.ஆ.1 முதல் ம.சா.ஆ.5 வரையிலான ஆவணங்கள் தாக்கல் செய்யப்பட்டு குறியீடு செய்யப்பட்டுள்ளது. எதிர்மனுதாரர் தரப்பில் சாட்சிகள் யாரும் விசாரிக்கப்படவில்லை. சான்றாவணங்கள் எவையும் குறியீடு செய்யப்படவில்லை.

5. **இம்மனுவில் தீர்மானிக்கப்பட வேண்டிய பிரச்சினை யாதெனில்**:–

மனுதாரர் மனுவில் கோரியுள்ளவாறு இளவர்.லசிஹாதேவி, இளவர் சாய்கவின் ஆகியோர்களுக்கு வாரிசு அடிப்படையில் பாத்தியமான 2/3 பங்கு சொத்தினை அவரது தாயாரும் பாதுகாவலருமான மனுதாரர் விற்பனை செய்ய அனுமதியளித்து உத்தரவிடக்கோரி இளவர் மற்றும் காப்பாளர் சட்டம் பிரிவு 7 (1)(b)–ன் கீழ் தாக்கல் செய்துள்ள இம்மனு அனுமதிக்கத்தக்கதா? இல்லையா ?

MEHBUB ALI KHAN A K

Digitally signed by MEHBUB ALI KHAN A K
Date: 2026.03.11 17:56:40 +0530

**<u>தீர்வு</u>**

6. இருதரப்பும் கேட்கப்பட்டது. ஆவணங்கள் பரிசீலனை செய்யப்பட்டன. இளவர்.லசிஹாதேவி, இளவர் சாய்கவின் ஆகியோர்களுக்கு வாரிசு அடிப்படையில் பாத்தியமான 2/3 பங்கு சொத்தினை அவரது தாயாரும் பாதுகாவலருமான மனுதாரர் விற்பனை செய்ய அனுமதியளித்து உத்தரவிடக்கோரி மனுதாரரால் இம்மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

7. இம்மனுவில் மனுதாரர் லிங்கலெட்சுமி ம.சா.1 ஆக விசாரிக்கப்பட்டுள்ளார். ம.சா.1 அவருடைய நிரூபண வாக்குமூலத்தில், தனக்கும், பாலாஜி என்பவருக்கும் நடைபெற்ற திருமணத்தின் பயனாக கடந்த 06.09.2012–ம் தேதியன்று லசிஹாதேவி என்ற பெண் குழந்தையும், 23.01.2015 ம் தேதியன்று சாய்கவின் என்ற ஆண் குழந்தை பிறந்ததாகவும், மேற்படி இளவர் குழந்தைகளின் பிறப்புச் சான்றிதழ் ம.சா.ஆ.4 மற்றும் ம.சா.ஆ.5 ஆக தாக்கல் செய்யப்பட்டு குறியீடு செய்யப்பட்டுள்ளதாகவும், அதன் பின்னர் தனது கணவர் 19.09.2017 ம் தேதியன்று இறந்ததற்கான இறப்புச்சான்றிதழ் ம.சா.ஆ.2 ஆகவும், தனது கவணருக்கு தானும், இளவர்களும் வாரிசுகள் என்பதற்கான வாரிசு சான்றிதழ் ம.சா.ஆ.3 ஆக தாக்கல் செய்யப்பட்டு குறியீடு செய்யப்பட்டுள்ளதாகவும், தனது கணவர் இறந்தபின்னர் அவருக்கு பூர்வீகப் பாத்தியமான மனு சொத்தை கடந்த 24.10.2018 ம் தேதியன்று ஆவண எண்.1564/2018 ல் மனுதாரர் மற்றும் இளவர்கள் பெயரில் எதிர்மனுதாரருடன் ஏற்படுத்திய பாகப்பிரிவினை பத்திரம் ம.சா.ஆ.1 ஆக தாக்கல் செய்யப்பட்டு குறியீடு செய்யப்பட்டுள்ளதாகவும், இளவர் குழந்தைகளின் கல்வி மற்றும் பராமரிப்பு செலவிற்காக மனுவில் கண்ட சொத்தை விற்பனை செய்ய அனுமதி கோரி தாக்கல் செய்யப்பட்டுள்ளதாகவும் கூறியுள்ளார்.

MEHBUB ALI KHAN A K
Digitally signed by MEHBUB ALI KHAN A K
Date: 2026.03.11 17:56:44 +0530

8. மேலும் ம.சா.1 தனது நிரூபண வாக்குமூலத்தில், தனது கணவர் இல்லாததால் எந்த வேலைக்கும் செல்லாமல் குடும்ப வருமானமும் இல்லாமல் இளவர் குழந்தைகளின் கல்வி, மருத்துவம் மற்றும் அன்றாட தேவைகளுக்கு பணம் இல்லாமல் மிகவும் சிரமப்பட்டு வருவதாகவும், தற்போது இளவர் லசிஹாதேவி மற்றும் இளவர் சாய்கவின் ஆகியோர்களை பராமரிக்கக்கூடிய அளவிற்கு போதுமான பண வசதி இல்லாமல் மிகவும் கஷ்டப்பட்டு வருவதாகவும், இம்மனுவில் கண்ட சொத்தை விற்பனை செய்து அதன் மூலம் கிடைக்கும் பணத்தை இளவர்களுடைய நலனுக்கு மட்டுமே பயன்படுத்துவதாகவும், மேலும் நீதிமன்ற உத்தரவின் பேரில் தேசியமயமாக்கப்பட்ட வங்கியில் வைப்பீடு செய்வதாகவும், இளவர்களுக்கு தாயார் என்ற முறையில் இளவருக்கும் அவரது சொத்துக்கும் காப்பாளராக நியமனம் கோரக்கூடிய தகுதியும், உரிமையும் தனக்கு மட்டுமே இருப்பதாகவும், மேற்படி சொத்தில் தனக்கு 1/3 பாகமும், மைனர் குழந்தைகளுக்கு 2/3 பாகமும் இருப்பதால் தனியாக விற்க முடியாததால் குழந்தைகளின் பாகத்தையும் சேர்த்து விற்பனை செய்ய முடியும் என்பதால் மேற்படி இளவருக்கு, தன்னை சட்டப்படியான காப்பளார் என்று நீதிமன்றத்தின் மூலமாக நியமனம் செய்து உத்தரவு பெற்றால் மட்டுமே இம்மனுவில் கண்ட சொத்தை விற்பனை செய்து அந்த தொகையை மைனர் குழந்தைகளின் கல்வி மற்றும் இதர செலவுகளுக்காக மட்டுமே பயன்படுத்துவதாக குறிப்பிட்டுள்ளதை கருத்தில்கொண்டு பார்க்கும்போது இளவர்களின் தாயாரான மனுதாரர் மேற்படி இளவர் குழந்தைகளின் நலனுக்கு எதிராக செயல்படக்கூடியவர் அல்ல என்று இந்நீதிமன்றம் கருதுகிறது.

MEHBUB ALI KHAN A K

Digitally signed by MEHBUB ALI KHAN A K
Date: 2026.03.11 17:56:48 +0530

9. எதிர்மனுதாரர் தரப்பில் தாக்கல் செய்துள்ள எதிருரையில் மனுதாரரின் மனுவினை அனுமதிப்பதற்கு ஆட்சேபனை இல்லை என்று தெரிவித்துள்ளார். எனவே மனுதாரர் தரப்பில் கூறப்பட்டுள்ள கூற்றுக்களையும்இ சாட்சிய பிரமாண வாக்குமூலம் மற்றும் எதிர்மனுதாரர் தரப்பில் ஆட்சேபனை எதுவும் இல்லை என்பதையும் கருத்தில் கொண்டும்இ இளவர்களின் எதிர்கால நலனை பரிசீலனை செய்தும், மனுதாரரே இளவர்களுக்கு பாதுகாவலர் என்ற முறையில் இளவர் குழந்தைக்கு வாரிசு அடிப்படையில் பாத்தியமான 2/3 பங்கு சொத்தினை அவரது தாயாரும் பாதுகாவலருமான மனுதாரர் விற்பனை செய்ய அனுமதியளிக்கவும் மனுதாரர் கோரியுள்ள கோரிக்கையானது நியாயமாக உள்ளதால் அதனை இந்நீதிமன்றம் ஏற்று இம்மனு அனுமதிக்கத்தக்கது என்று முடிவு செய்கிறது.

**முடிவில்,** இம்மனு கீழ்கண்ட நிபந்தனைகளுடன் அனுமதிக்கப்பட்டு உத்தரவிடப்படுகிறது.

1. இளவர் லசிஹாதேவி, இளவர் சாய்கவின் ஆகியோர்களுக்கு மனுதாரரை பாதுகாவலராக நியமனம் செய்து உத்தரவிடப்படுகிறது.

2. இளவர் லசிஹாதேவி மற்றும் இளவர் சாய்கவினுக்கு பாத்தியமான மனுவில் கண்ட 2/3 பங்கு சொத்தினை இளவர்களின் தாயாரும் பாதுகாவலருமான மனுதாரர் விற்பனை செய்ய அனுமதி அளித்து உத்தரவிடப்படுகிறது. மேற்படி கிரையப்பத்திரம் பதிவு செய்யப்பட்ட பின் அதன் அசலை சார்பதிவாளர் நேரடியாக இந்நீதிமன்றத்திற்கு அனுப்பி வைக்கவேண்டும் என்றும் அதன் நகலை நீதிமன்றத்தில் தாக்கல் செய்து அசல் கிரையப்பத்திரத்தை மனுதாரர்

MEHBUB ALI KHAN A K

Digitally signed by MEHBUB ALI KHAN A K
Date: 2026.03.11 17:56:53 +0530

பெற்றுக்கொள்ளவேண்டும் என்றும் உத்தரவிடப்படுகிறது.

3. மனு சொத்தின் கிரையத்தின் மூலம் கிடைக்கும் கிரையத் தொகையை இளவர்களின் தாயார் கிரையத்தொகை பெற்ற நாளிலிருந்து 15 நாட்களுக்குள் ஏதேனும் ஒரு தேசியமயமாக்கப்பட்ட வங்கியில் இளவர்களின் பெயரில் நிரந்தர வைப்பீடு செய்தும், மேற்படி தொகையில் இருந்து கிடைக்கும் வட்டியை மூன்று மாதங்களுக்கு ஒருமுறை பெற்று இளவர்களின் நலனுக்காக இளவர்களின் தாயார் பயன்படுத்த வேண்டுமென்று உத்தரவிடப்படுகிறது.

4. மேற்படி மனுதாரர் கிரையத்தொகையை வைப்பீடு செய்ததற்கான ரசீதை மேற்படி ஆவணம் பதிவு செய்யப்பட்ட 15 நாட்களுக்குள் இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்ய வேண்டுமென்று உத்தரவிடப்படுகிறது.

5. செலவுத் தொகை இல்லை.

இந்த உத்தரவு என்னால் சுருக்கெழுத்தாளருக்கு நேரடியாகச் சொல்லப்பட்டு, சுருக்கெழுத்தரால் கணினியில் தட்டச்சு செய்யப்பட்டு, என்னால் பிழை நீக்கம் செய்யப்பட்ட பின்னர் இன்று 2026-ம் ஆண்டு மார்ச் திங்கள் 11-ம் நாள் இத்திறந்த நீதிமன்றத்தில் அவையறியப் பகரப்பட்டது.

MEHBUB ALI KHAN A K
Digitally signed by MEHBUB ALI KHAN A K
Date: 2026.03.11 17:56:57 +0530

முதன்மை மாவட்ட நீதிபதி,
இராமநாதபுரம்.

**மனுதாரர் தரப்பு சாட்சி :–**

ம.சா.1. திருமதி.லிங்கலெட்சுமி

**மனுதாரர் தரப்பு சான்றாவணங்கள்**:-

| | | |
|---|---|---|
| ம.சா.ஆ.1 | 24.10.2018 | மனுதாரர் தனக்காகவும் தனது மைனர் குழந்தைகளுக்கு காப்பாளராகவும், எதிர்மனுதாரருடன் செய்து கொண்ட பாகபிரிவினை பத்திரம் வலைதளத்தில் இருந்து பதிவிறக்கம் செய்த நகல் |
| ம.சா.ஆ.2 | –– | மைனர்களின் தகப்பனாரான பாலாஜியின் இறப்பு சான்றிதழ் சான்றிட்ட நகல் |
| ம.சா.ஆ.3 | –– | மைனர்களின் தகப்பனாரான பாலாஜியின் வாரிசு சான்றிதழ் அசல் |
| ம.சா.ஆ.4 | –– | மைனர்.லசிஹாதேவியின் பிறப்பு சான்றிதழ் சான்றிட்ட நகல் |
| ம.சா.ஆ.5 | –– | மைனர் சாய்கவினின் பிறப்பு சான்றிதழ் சான்றிட்ட நகல் |

**எதிர்மனுதாரர் தரப்பு சாட்சி மற்றும் சான்றாவணங்கள்**:- –இல்லை–

MEHBUB ALI KHAN A K

Digitally signed by MEHBUB ALI KHAN A K
Date: 2026.03.11 17:57:05 +0530

முதன்மை மாவட்ட நீதிபதி,
இராமநாதபுரம்.